## பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

செ.வெ.எண். 53 நாள்: 12.03.2025

**கோடம்பாக்கம் மண்டலத்திற்குட்பட்ட நெசப்பாக்கம் மயானபூமியின் எரிவாயு தகனமேடையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உள்ளதால், பொதுமக்கள் ஏ.வி.எம். மற்றும் அன்னைசத்யா நகர் மயானபூமிகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி அறிவிப்பு**

பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-137க்குட்பட்ட நெசப்பாக்கம் மயானபூமியில் எரிவாயு தகனமேடையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உள்ளதால், 12.03.2025 முதல் 11.09.2025 வரை நெசப்பாக்கம் மயானபூமியில் எரிவாயு தகனமேடை இயங்காது.

எனவே, நெசப்பாக்கம் மயானபூமியில் எரிவாயு தகனமேடையில் பராமரிப்பு பணிகள் நடைபெறும் நாட்களில் பொதுமக்கள் அருகிலுள்ள ஏ.வி.எம். மற்றும் அன்னைசத்யா நகர் மயானபூமிகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி